Register No. | | | | | | | | |

**FA6A**

**7157–26**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

CONSTITUTIONAL LAW — II

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY * ILLUPPUR - 622102 *

Time : 2½ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the provisions related to ordinance making power of President of India. What were the observations made by the Supreme Court in D.C. Wadhwa-vs-State of Bihar case?

   இந்தியக் குடியரசுத் தலைவரின் அவசரச் சட்டம் பிறப்பிப்பது தொடர்பான சட்ட விதிமுறைகளை விளக்குக. டி.சி. வாத்வா-எதிர்-பீகார் மாநில அரசு என்ற வழக்கில், உச்சநீதிமன்றம் அளித்த கூர்நோக்குகள் யாவை?

2. How Governor of a State is appointed? What are his powers and functions in a State?

   ஒரு மாநிலத்தின் ஆளுநர் எவ்வாறு நியமனம் செய்யப்படுகிறார்? ஒரு மாநிலத்தில் அவரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் யாவை?

3. Define 'Money Bill'. Explain the procedure followed by parliament in passing a money bill.

   'பண மசோதா' என்பதை வரையறை செய்க. ஒரு பண மசோதாவை நிறைவேற்றம் செய்ய நாடாளுமன்றம் மேற்கொள்ளும் நடைமுறையை விவரிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. List out the functions of Election Commission of India.

   இந்தியத் தேர்தல் ஆணையத்தின் பணிகளை பட்டியலிடுக.

5. Discuss, how independence of judiciary is maintained under the Indian Constitution?

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் நீதித்துறையின் சுதந்திரம் எவ்வாறு நிலைநிறுத்தப்படுகிறது என்று விவாதிக்கவும்.

6. Elucidate the provisions relating to power of parliament to legislate with respect to matters contained in the State list.

மாநில பட்டியலில் உள்ள விஷயங்களுக்கு, நாடாளுமன்றம் சட்டமியற்றும் அதிகாரம் குறித்த சட்ட விதிமுறைகளை தெளிவுபடுத்துக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Writ of Mandamus.

செயலுறுத்தும் நீதிப்பேராணை

(b) Office of Profit.

ஆதாயம் தரும் பணி.

(c) Doctrine of Prospective overruling.

முன்மேவு ஆளுகை.

(d) Public Interest Litigation.

பொது நலன் வழக்கு.

(e) Disputes relating to Inter-states water.

உள் மாநிலங்களுக்கிடையேயான தண்ணீர் சர்ச்சை.

(f) Doctrine of precedent.

முன்தீர்ப்பு கோட்பாடு.

(g) Attorney General of India-functions.

இந்தியத் தலைமை வழக்குரைஞரின் பணிகள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A letter was sent by an advocate to the Chief Justice of India to step down on the grounds of giving wrong age while assumption of charge. Examine, whether the act of the advocate amounts to criminal contempt.

ஒரு வழக்கறிஞர், இந்திய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு ஒரு கடிதம் அனுப்பினார். நீதிபதி தவறான வயதைக் காட்டி பணி ஏற்றதால் பதவி விலகும்படி கூறியிருந்தார். வழக்கறிஞரின் இந்தச் செயல் குற்றமுறு அவமதிப்பு வழக்கில் வருமா?

9. On inspection, of a godown owned by a person, the Government authorities seized some goods on the ground of unauthorised stock. However, he was found not guilty and ordered to return the goods. The goods were damaged because of negligence of officials. Decide whether state is liable?

   அரசு அதிகாரிகள் ஒரு கிடங்கினை பரிசோதித்தனர். அனுமதியின்றி பொருட்களை பதுக்கியதாகக் கூறி சில பொருட்களை கைப்பற்றினர். ஆனால், பொருட்களின் சொந்தக்காரர் தவறு செய்யவில்லை என்று தெரியவந்தது. எனவே, பொருட்களை அவரிடம் ஒப்படைக்க உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. அதிகாரிகளின் கவனக்குறைவால், பொருட்கள் சேதமடைந்துவிட்டது. அரசு பொறுப்பாகுமா என்று தீர்மானி.

10. An ordinary bill passed by one house was transmitted to other house, which rejected the bill. Explain the subsequent condition of the bill.

    ஒரு சாதாரண மசோதா ஒரு அவையால் நிறைவேற்றம் செய்யப்பட்டு, மற்றொரு அவைக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. அந்த அவை மசோதாவை நிராகிக்கிறது. மேற்படி மசோதாவின் பின்நிலை குறித்து விவரி.

---

Register No. | | | | | | | | |

**FA6B** **7158-26**

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Five – year Regular Course)

Third Year – Sixth Semester

COMPANY LAW

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ★ ILLUPPUR - 622102. ★

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கு ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the circumstances under which the Court may lift the corporate veil.

   நீதிமன்றம் நிறுவன திரை விலக்கக்கூடிய சூழ்நிலைகளை விவரி.

2. Enumerate the kinds of shares and explain the restrictions on allotment of shares.

   பங்குகளின் வகைகளை வரிசைப்படுத்தி பங்கு ஒதுக்கீட்டின் கட்டுப்பாடுகளை விவரி.

3. Describe the executing procedures in various modes of winding up of companies.

   பல்வேறு வகையான நிறுவன கலைப்பின் செயல்பாட்டு நடைமுறைகளை விவரிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Put forward the requisites of a valid meeting.

   செல்லத்தக்க கூட்டத்தின் முக்கியக் கூறுகளை எடுத்துரைக்கவும்.

5. Analyse the organisation, powers and functions of SEBI.

   செபியின் அமைப்பு, அதிகாரம் மற்றும் செயல்பாடுகளை ஆராயவும்.

6. Who can become member of a company? How he can become member of a company? Explain.

   யார் நிறுவனத்தின் உறுப்பினராகலாம்? எவ்வாறு அவர் நிறுவனத்தின் உறுப்பினராகலாம்? விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Government Company.

அரசு நிறுவனம்.

(b) Special Resolution.

சிறப்புத் தீர்மானம்.

(c) Name clause.

பெயர் பகுதி.

(d) Key Managerial Personnel.

மேலாளர் சார் பணியாளர்கள்.

(e) Type of Debentures.

கடனீட்டு பத்திரத்தின் வகைகள்.

(f) Golden Legacy Rule of Prospectus.

திட்ட அறிவிப்பின் தங்க மரபு விதி.

(g) Ultra vires contracts.

அதிகார வரம்பு மீறல் ஒப்பந்தங்கள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A company issued optionally fully convertible debentures to the investors without the permission of the Securities and Exchange Board of India. On being opposed by SEBI, the company contended that as it is not listed in the stock exchange, SEBI has no jurisdiction. Analyse the jurisdiction of SEBI and decide.

ஒரு நிறுவனம், இந்திய பிணைய மாற்று வாரியத்தின் அனுமதியின்றி விருப்பப்படி முழுமையாக மாற்றத்தக்க கடனீட்டுப் பத்திரங்களை முதலீட்டாளர்களுக்கு வழங்கினர். செபியால் எதிர்க்கப்பட்ட பொழுது, நிறுவனம் பங்கு மாற்றகத்தில் பட்டியலிடப்படாததால், செபிக்கு அதிகார வரம்பில்லை என்று எதிர்வாதமிட்டது செபியின் அதிகார வரம்பை ஆராய்ந்து தீர்மானிக்க.

9. By a deed, company charged all machinery in present and future trade transactions. The deed also provides that "property shall be in lender possession". Find the type of charge executed by the company and explain.

ஒரு நிறுவனம் தன்னுடைய நிகழ்கால மற்றும் எதிர்கால வணிக பரிவர்த்தனையில் பயன்படுத்தப்படும் இயந்திரங்களின் மீது ஆவணத்தின் மூலம் பற்று ஏற்படுத்தியது. ஆவணத்தில், "அச்சொத்து கடன் தருநர் உடைமையின் கீழ் அமைந்திருக்கும்" என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. நிறுவனம் செயல்படுத்தியுள்ள பற்றை கண்டறிந்து விளக்குக.

10. In a shareholders meeting, a resolution has been passed to remove 9 directors of the company for misutilising the fund without revealing the reasons. Discuss the validity of resolution and decide proper remedy.

பங்குதாரர் கூட்டத்தில் காரணங்கள் குறிப்பிடாமல், நிதி மோசடிக்காக 9 இயக்குநர்களை நீக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தின் செல்லுந்தன்மையை ஆராய்ந்து முறையான தீர்வை தீர்மானிக்கவும்.

---

Register No. | | | | | | | | |

**FA6C** **7159–26**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

LABOUR LAW – I

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Critically evaluate the power of the Government to refer an industrial dispute under the Industrial Disputes Act, 1947.

   தொழில் தகராறு சட்டம், 1947-ன் கீழ் தொழிற்முறை சச்சரவுகளை கட்டாயத் தீர்ப்பு முறைக்கு அனுப்புதலுக்கான அரசின் அதிகாரத்தை கூர்ந்தாய்வு செய்க.

2. Explain about the procedure for registration of a Trade Union. Discuss the circumstances in which the Registrar can cancel the registration.

   ஒரு தொழிற்சங்கத்தை பதிவு செய்வதற்கான நடைமுறைகள் பற்றி விளக்குக. எந்தெந்தச் சூழ்நிலைகளில் தொழிற்சங்க பதிவு பதிவாளரால் ரத்து செய்யப்படலாம்?

3. State the various wage concepts under the Minimum Wages Act, 1948.

   குறைந்தபட்ச ஊதியங்கள் சட்டம், 1948ன் கீழ் பல்வேறு வகையான ஊதிய கருத்துருக்களை எடுத்துரைக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. State the authorities and their powers under the Payment of Wages Act, 1936.

   1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ் அமைந்துள்ள அதிகார அமைப்பு மற்றும் அதன் அதிகாரங்களை குறிப்பிடுக.

5. State the salient features of the Industrial Employment (Standing Orders) Act, 1946.

1946-ம் ஆண்டு தொழிற்சாலை பணிகள் (நிலையாணைகள்) சட்டத்தின் சிறப்பம்சங்களைக் கூறுக.

6. Discuss the procedure for retrenchment order under the Industrial Disputes Act, 1947.

தொழிற்துறை சச்சரவு சட்டம் 1947-ன் கீழ் ஆட்குறைப்பிற்கான நடைமுறையை விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on <u>FIVE</u> of the following :

பின்வருவனவற்றுள் <u>ஐந்திற்கு</u> சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Strike

வேலை நிறுத்தம்

(b) Disqualification of office bearers of the Trade Union

தொழிற்சங்க நிர்வாகிகளின் தகுதி இழப்பு

(c) Collective Bargaining

கூட்டுப்பேரம்

(d) Protected workman

பாதுகாக்கப்பட்ட தொழிலாளி

(e) Living Wage

வாழ்க்கை ஊதியம்

(f) Theories of Wages

ஊதியக் கோட்பாடுகள்

(g) International Labour Organisation

சர்வதேச தொழிலாளர் அமைப்பு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A laundry was attached with a medical college hospital. Twenty workmen employed in the laundry were engaged in washing the clothes used in the hospital. Decide whether the laundry is an Industry?

மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஒன்றுடன் சலவைச் சாலை இணைக்கப்பட்டிருந்தது. அதில் வேலை செய்த இருபது தொழிலாளிகள் மருத்துவமனையின் துணிகளை சுத்தம் செய்யப் பயன்படுத்தப்பட்டனர். சலவைச் சாலை தொழிற்சாலையாக கருதப்படுமா? என்பதனை தீர்மானிக்கவும்.

9. Ramu is running an industry. The minimum wages for the industry fixed by the Government was Rs. 500. Ramu challenges this stating that the industry is not financially sound to pay minimum wages at Rs. 500. Decide.

ராமு என்பவர் ஒரு தொழிற்சாலை நடத்துகிறார். அந்தத் தொழிலுக்கு அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியமானது ரூ. 500 ஆகும். தனது தொழிற்சாலை நிதி பற்றாக்குறையில் உள்ளதால் மேற்கூறிய குறைந்தபட்ச ஊதியம் ரூ. 500 அளிக்க இயலாது என்று அவர் கூறுகிறார். முடிவு செய்க.

10. The standing orders of a company was certified on 01.01.2025. The worker's representatives received the certified copy and filed an application for modification of the standing order on the ground of change of circumstances on 31.03.2025. Decide the application.

01.01.2025 அன்று ஒரு நிறும நிலையாணை விதிகள் சான்றளிக்கப்படுகின்றது. அதன் சான்றிட்ட நகலைப் பெற்றுக்கொண்டு தொழிலாளர் தரப்புப் பெயராளர்கள் 31.03.2025 அன்று சூழ்நிலை மாற்றம் என்ற அடிப்படையில் அந்நிலையாணையைத் திருத்த மனு செய்கின்றனர். அவ்விண்ணப்பத்தை தீர்மானிக்கவும்.

---